இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 23 ISSUE 12 DECEMBER -2023 | ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-

உங்கள் அனைவருக்கும் இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
சார்பாக இனிய கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துகள்



# இயேசுவை
## காத்துக்கொள்ளுங்கள்

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிக்கை இப்பொழுது **Digital** முறையில் நம்முடைய இணையதளத்திலும்
**WWW.JESUSLIVES.IN**


செம்பட்டியில்
ஆண்டு இறுதி
சிறப்பு உபவாச
ஜெபம்
டிசம்பர்
7,8,9
வியாழன் வெள்ளி சனி
9:30am to 2:00pm
இடம் வானத்தின் வாசல்,
எழுப்புதல் ஜெப மையம்,
செம்பட்டி, திண்டுக்கல்


மதுரை மாவட்ட அனைத்து திருச்சபைகள் மற்றும்
இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் இணைந்து நடத்தும்
மதுரையில் எழுப்புதல்
உபவாச ஜெபம்
டிசம்பர்
16
9:30am to 2:00pm
சனிக்கிழமை
இடம்
இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம், பைபாஸ் ரோடு,
பழங்காநத்தம், PRC Depot அருகில், மதுரை

# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பின் நல்வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். வருஷத்தின் கடைசி மாதத்தில் நாம் கடந்து வந்திருக்கிறோம். **நீர் எனக்குப் பாராட்டின உமது கிருபை பெரியது (சங் 86:13)** என்ற வார்த்தையின்படி தேவன் இந்த ஆண்டு முழுவதும் நம்மை அற்புதமாய் நடத்தினார், ஆச்சரியமாய் நடத்தினார். கடந்து வந்த பாதைகளிலும் சென்று போன மாதங்களிலும் நம்மோடு இருந்தார், பாதுகாத்தார் அவருக்கே மகிமை உண்டாவதாக. கடந்த நவம்பர் மாதத்தில் 6 முதல் 11 ஆம் தேதி வரை நடந்த ஆண்டு இறுதி சிறப்பு உபவாச ஜெபங்களில் தேவன் அளவில்லாத ஆசீர்வாதத்தைக் கட்டளையிட்டார். இன்னும் நாம் கர்த்தருக்குள் பெலப்படவும், ஆசீர்வதிக்கப்படவும் டிசம்பர் 7,8,9 ஆகிய தேதிகளில் மூன்று நாட்கள் சிறப்பு உபவாச ஜெபம் செம்பட்டி வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெபமையத்தில் வைத்திருக்கிறோம். மேலும் ஜனவரி 1 ஆம் தேதி (2024) மாலை 3 மணி முதல் 6 மணி வரை வாக்குத்தத்த ஸ்தோத்திரக் கூட்டம் நடைபெறும், இந்த கூட்டத்தில் பங்கு கொள்ள உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். தேவனுடைய கிருபையால் நமது யூடியூப் சேனலில் தினமும் காலை 6 மணிக்கு **இயேசுவை தினம் பார்ப்போம்** என்ற நிகழ்ச்சியும், திங்கள் முதல் வெள்ளி வரை இரவு 9:00 மணி முதல் 9:45 வரை **கர்த்தாவே என்னை கைதூக்கி விடும்** என்ற நிகழ்ச்சியும், மாதத்தின் கடைசிநாள் இரவு 10:30 மணி முதல் 12:30 மணி வரை **நம்பிக்கையின் இரவு** நிகழ்ச்சியும் மிகுந்த ஆசீர்வாதமாக நடைபெறுகிறது. இன்னும் வருகின்ற நாட்களில் தேவகிருபையோடு நடத்தவும், தகுந்த ஆட்கள் நமக்கு கிடைக்கவும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். கர்த்தருடைய மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.

*இயேசுவின் பணியில்,*

L. Vincent Raj

(சகோ. L. வின்சென்ட்ராஜ்)

உங்கள் அனைவருக்கும் இனிய கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துகள்







# இயேசுவை காத்துக்கொள்ளுங்கள்

சகோ. L. வின்சென்ட்ராஜ்

அவன் எழுந்து பிள்ளையையும், அதின் தாயையும் கூட்டிக் கொண்டு இஸ்ரவேல் தேசத்துக்கு வந்தான். மத் 2:21

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துக்கள். தேவனுடைய கிருபையினால் இந்த செய்தியின் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். வருடத்தின் கடைசி மாதத்தில் நாம் கடந்து வந்திருக்கிறோம். கிறிஸ்துமஸ், புதுவருடம் என்று பரபரப்பாய் நாம் ஓடிக்கொண்டிருப் போம். அப்படிப்பட்ட இந்த நாட்களில் இயேசுவின் பிறப்பின்படியும், அவர் பிறந்த போது யார் கலங்கினார்கள், யார் சந்தோஷப்பட்டார்கள், யார் இரட்சிக்கப் பட்டார்கள், யார் வெளிச்சத்தைக் கண்டார்கள் என்றெல்லாம் பார்க்கப் போகிறோம். கிழக்கிலிருந்து மூன்று சாஸ்திரிகள் ஏரோது அரண்மனைக்குச் சென்று யூதருக்கு ராஜாவாக பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரை பணிந்து கொள்ள வந்தோம் என்றார்கள். அதைக் கேட்ட ஏரோது ராஜாவும், அவனோடு கூட எருசலேம் நகரத்தாரும் கலங்கினார்கள். இயேசு பிறந்த போது உலகத்திற்கு வெளிச்சம், இருளில் இருந்த ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள், பாவ மன்னிப்பைப் பெற்றார்கள். அற்புதங்களையும், அதிசயங்களையும் கண்டார்கள்.

லூக் 1:14-ல் அவன் பிறப்பினிமித்தம் அநேகர் சந்தோஷப்படுவார்கள்.



லூக் 2:32-ல் சிமியோன் என்ற வயதான தீர்க்கதரிசி உம்முடைய இரட்சண்யத்தை என் கண்கள் கண்டது என்றான். இப்படி பூமியில் சமாதானமும், சந்தோஷமும் உண்டான வேளையில், ஏரோது ராஜா மட்டும் கலங்கிக் கொண்டிருந்தான். அவன் மட்டுமல்ல எருசலேம் நகரத்தாரும் கலங்கினார்கள். இன்றைக்கு ஒரு மனிதன் மாறும் போது, மனந்திரும்பும் போது, ஆண்டவராகிய இயேசுவை ஏற்றுக் கொள்ளுகிற போது பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாகிறது. லூக் 15:7-ல் அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும், மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்றார். இயேசுவின் பிறப்பு அவருக்கென்று முன் குறிக்கப்பட்டவர்களுக்கு சந்தோஷம், ஆனால் ஏரோதுக்கு, அகந்தையுள்ளவர்களுக்கு, பெருமையுள்ளவர்களுக்கு கலக்கம், கலங்கிப் பயந்தார்கள்.

## தேவனால் முன்குறிக்கப்பட்டவர்

சவுல் என்ற ராஜாவைப் பாருங்கள். 1 சாமு 18:12-ல் கர்த்தர் தாவீதோடே கூட இருக்கிறார் என்று சவுல் கண்டு தாவீதுக்குப் பயந்தான், கலங்கினான், காய்மாகாரமாய் பொறாமை கொண்டான். 1 சாமு 18:29-ல் ஆகையால் சவுல் இன்னும் அதிகமாய்த் தாவீதுக்குப் பயந்து, தான் உயிரோடிருந்த நாளெல்லாம் தாவீதுக்குச் சத்துருவாயிருந்தான். ஒரு மனிதனோடு தேவன் இருக்கும் போது, இரட்சிக்கப்படும் போது அல்லது தேவன் அந்த மனிதனை ஆசீர்வதிக்கும் போது. சத்துருவினால், சத்துருவின் மனிதர்களால் தாங்கிக் கொள்ள முடியாது. அதனால் தான் சவுல், தாவீதை கொல்லத் தேடினான். உயிரோடிருக்கும் நாளெல்லாம் தாவீதை துரத்தி, விரட்டி கொல்ல வகை தேடினான்.

இதுதான் இயேசு பிறப்பின் போதும் நடந்தது. ஏரோது நான் ராஜாவாக இருக்கும் போது இன்னொரு ராஜா எதற்கு என்று கேட்டான். அவர் எங்கே பிறப்பார், எப்படி பிறப்பார் என்று கேட்டு அவரை கொல்ல வகை தேடினான். அதனால் தான் ஏரோது அரண்மனைக்கு வந்த சாஸ்திரிகளைப் பார்த்து மத் 2:8-ல் நீங்கள் போய் பிள்ளையைக் குறித்து திட்டமாய் விசாரியுங்கள், நீங்கள் அதைக் கண்ட பின்பு, நானும் வந்து அதை பணிந்து கொள்ளும்படி எனக்கு அறிவியுங்கள் என்று சொல்லி, அவர்களைப் பெத்லகேமுக்கு அனுப்பி வைத்தான்.



நல்ல வேளையாக (மத் 2:12) பின்பு அவர்கள் ஏரோதினிடத்திற்கு திரும்பிப் போக வேண்டாமென்று சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்கப்பட்டு, வேறு வழியாய் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப் போனார்கள். புதிய பாதையில் தேவனைப் பின்பற்றினார்கள். பழைய வழியை மாற்றிக் கொண்டார்கள்.

சில வருஷங்களுக்கு முன் தேவனை அறியாத குடும்பத்தில் பிறந்த ஒரு மகள், தீவிர மதவைராக்கியமுள்ளவர். காலையிலும், மாலையிலும் அவர்களுடைய தெய்வங்களுக்கு பூஜை வழிபாடு செய்வார். எப்படியோ தன் சோதனையான நேரத்தில், குழப்பமான நேரத்தில் டிவி-யில் கிறிஸ்தவ நிகழ்ச்சியைப் பார்த்து இரட்சிக்கப்பட்டார். இது அவருடைய கணவருக்கு பிடிக்கவில்லை. என்ன செய்தார் தெரியுமா? அவர் போகிற ஜெபக்கூட்டத்திற்கு எல்லாம் கூடவே போனார். அவரும் இயேசுவை பின்பற்றுவதைப் போல நடித்தார். ஆனால் அவர் செல்போனில் சேட்டிங் பண்ணுவார். இந்த பெண் தன் கணவர் மனந்திருந்தி விட்டார் என்று நம்பினார். எல்லா கிறிஸ்தவ கூட்டங்களுக்கும் அழைத்து சென்றார். சில மாதங்கள் கடந்து போன பின்பு அவளோடு தர்க்கம் பண்ணினார். நாளடைவில் பிரச்சனை முற்றி கோர்ட்டில் கேஸ் போட்டு நான் வேண்டுமா? இயேசு வேண்டுமா? என்றும், என்னை மதம் மாற்றுகிறார், நான் இந்துவிலே தானே திருமணம் முடித்தேன் என்று பழிவாங்கி இன்றைக்கு டைவஸ், விவாகரத்து பெற்று விரட்டி விட்டார். இப்படிப்பட்ட ஏரோதுகளிடத்தில், சவுல்களிடத்தில் நாம் ஜாக்கிரதையாக, எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பி விடக்கூடாது

ஒரு குழந்தை வளருகிற வரை பெரியவர்கள் தான், பெற்றவர்கள் தான் பாதுகாக்க வேண்டும். எது தீமை, எங்கே ஆபத்து, எங்கே அழிவு இருக்கிறது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். அதனால் ஏரோது கலங்கின போது, பயந்த போது இயேசுவை கொல்ல வகை தேடின போது தேவன் அவன் கண்களுக்கு மறைத்துப் போட்டார், விலக்கி வைத்தார். தான் சாஸ்திரிகளால் வஞ்சிக்கப்பட்டதை அறிந்து எருசலேம், பெத்லகேம் முழுவதிலும் உள்ள ஆண் பிள்ளைகளை கொலை செய்தான் என்று மத் 2:16 அப்படிச் சொல்லுகிறது. ஆனால் தேவன் அவருடைய பிள்ளைகளை பாதுகாக்கிறவர். மத் 2:13-15 வரை தேவன் யோசேப்புக்கு சொப்பனத்தில் தோன்றி ஏரோது இயேசுவை, பிள்ளையை கொல்லத் தேடுகிறான். ஆதலால் நீ எழுந்து பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக் கொண்டு எகிப்திற்கு ஓடிப்போ, நான் உனக்கு சொல்லும் வரைக்கும் அங்கே இரு என்றார். அவர்கள் ஏரோதின் மரண பரியந்தம் எகிப்திலே இருந்தார்கள், பாதுகாக்கப்பட்டார்கள்.

இன்றைக்கு சாத்தான், பிசாசு கோபவெறி கொண்டு அலைகிறான். நாம் தான் தேவனுடைய பாதுகாக்கிற செட்டைகளுக்குள் தஞ்சம், பாதுகாப்படைய வேண்டும்.

வெளி 12:12-ல் வாசித்துப் பாருங்கள் ஆகையால் பரலோகங்களே, அவைகளில்

வாசமாயிருக்கிறவர்களே, களிகூருங்கள். பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே ஐயோ, பிசாசானவன் தனக்குக் கொஞ்ச காலம் மாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்து வரும் என்றார்

அதினால் தான் மற்ற மார்க்கத்திலிருந்து புதிதாய் இயேசுவை ஏற்றுக் கொண்டவர்களுக்கு உபத்திரவம், எதிர்ப்பு, பாடுகள், நிந்தைகள் வருகிறது. இதை விளங்கிக் கொண்டு தேவ பிள்ளைகள் அவர்களை பாதுகாக்க வேண்டும், ஒளித்து வைக்க வேண்டும், ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருக்க வேண்டும். மோசேயின் வாழ்க்கையைப் பாருங்கள். அவர் பிறந்தபோது எகிப்து முழுவதிலும் ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. எபிரெயர்கள் பலுகுகிறார்கள், பெருகுகிறார்கள் நம்முடைய தேசத்தை கைப்பற்றி விடுவார்கள். ஆகவே இஸ்ரவேல் ஜனங்களுடைய ஆண் பிள்ளைகளை யெல்லாம் பிறந்தவுடனே கொல்லப்பட வேண்டும் என்று பார்வோன் சட்டம் இயற்றினான். யாத் 1:16-ல் நீங்கள் எபிரெய ஸ்திரிகளுக்கு மருத்துவம் செய்யும் போது, அவர்கள் மணையின்மேல் உட்கார்ந்திருக்கையில் பார்த்து ஆண்பிள்ளையானால் கொன்று போடுங்கள், அழித்துப் போடுங்கள் என்றான். காரணம் தேவன் மோசேயைக் குறித்து ஒரு நோக்கம் திட்டம் வைத்திருந்தார். அதைக் கண்ட பிசாசு அந்த திட்டத்தை நசுக்கவும், அழிக்கவும் ஆளும் ராஜாக்களை எழுப்பி, தேவன் முன் குறித்தவர்களை அழிக்க செயல்பட்டான். ஆனால் கர்த்தரோ மோசேக்கு துணை நின்று, எந்த பார்வோன் அழிக்க, கொல்ல நினைத்தாரோ, அதே அரண்மனையில் பாதுகாப்பாய் மோசே வளர்க்கப்பட்டார். அவரைக் கொண்டு தான் இஸ்ரவேல் ஜனங்களுக்கு மாபெரும் விடுதலையை தேவன் கொடுத்தார், ஆசீர்வாதத்தைக் கட்டளையிட்டார். சத்துரு கொண்டு வந்த தீமையை எல்லாம் தேவன் நன்மையாக முடியப்பண்ணினார். அதனால் தான் தேவன் எவர்களை அழைத்தாரோ, முன்குறித்தாரோ அவர்களை பாதுகாப்பாய் பத்திரப்படுத்தவும், மூன்று சாஸ்திரிகளுக்கு எச்சரித்து, வந்த வழியாய் போகாமல் ஏரோதின் கைக்கு தப்புவித்தார்.



இன்றைக்கு உங்களை குறித்து கலங்கினவர்கள், பயப்படுகிறவர்கள், உங்களுக்கு விரோதமாய் எழும்பும் போது, தேவன் சாத்தானின் கண்ணிக்கும், அவன் திட்டத்திற்கும் நம்மை விலக்கி காப்பார். நமக்குள் பிறந்த இயேசுவை, வாழ்கின்ற இயேசுவை நாம் தான் பாவம் இல்லாமல் பரிசுத்தமாய் பாதுகாக்க வேண்டும்.

## அழிக்கத் தேடினவர்கள் அழிந்து போனார்கள்

**நீ எழுந்து பிள்ளையையும், அதின் தாயையும் கூட்டிக் கொண்டு இஸ்ரவேல் தேசத்துக்கு போ, பிள்ளையின் பிராணனை வாங்கத் தேடினவர்கள் இறந்து போனார்கள் என்றார். ஆம் இயேசுவை கொல்லத் தேடினவர்கள், அழிக்கத் தேடினவர்கள் அழிந்து போனார்கள்.** என்றென்றைக்கும் தேவதிட்டம், தேவ சித்தம் தான் நிலைத்து நிற்கும். ஆண்டவராகிய தேவன் சொன்னார்

ஏசாயா 54:17-ல் உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போகும் என்றார்.
ஆம் நமக்கு விரோதமாய் சாத்தான் உருவாக்கும் ஆயுதம், சாத்தானின் மனிதர்கள் உருவாக்கும் ஆயுதம் வாய்க்காதே போகும் என்றார். ஒரு ஏரோது அல்ல, ஒரு பார்வோன் அல்ல, பல ஏரோதுக்களும் பல பார்வோன்களும் இன்றைக்கு தேவனுக்கு விரோதமாய் செயல்பட்டுக் கொண்டு தான் இருக்கிறார்கள், விரோதமான காரியங்களைச் செய்து கொண்டு தான் இருக்கிறார்கள்.
லூக்கா 13:31-33 வசனத்தை வாசித்துப் பாருங்கள். அந்த நாளிலே சில பரிசேயர் அவரிடத்தில் வந்து, நீர் இவ்விடத்தை விட்டுப் போய்விடும், ஏரோது உம்மை கொலை செய்ய மனதாயிருக்கிறான் என்றார்கள். அதற்கு இயேசு நான் இன்றைக்கும், நாளைக்கும் பிசாசுகளைத் துரத்தி, வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்கி, மூன்றாம் நாளிலே நிறைவடைவேன் **என்றார்.** இன்றைக்கும் ஏரோதுகளும், பார்வோன்களும் எழும்பி தேவனுக்கு விரோதமாகவும், அவருடைய பிள்ளைகளுக்கு விரோதமாகவும் செயல்பட்டுக் கொண்டு தான் இருக்கிறார்கள். அப் 12:1-ல் ஏரோது சபையை துன்பப்படுத்தினான். அது யூதருக்கு பிரியமாயிற்று என்று கண்டு பேதுருவையும் கொல்லத் தேடினான். இன்றைக்கு பல இடங்களில் ஜனங்கள் கொல்லப்படுகிறார்கள். சிறைச்சேதம் பண்ணப்படுகிறார்கள், ஊழியங்கள் தடுக்கப்படுகிறது, பயமுறுத்தப்படுகிறார்கள். குறிப்பாக சுவிசேஷ ஊழியம் நின்று விட்டது. சபைக்கு வெளியே யாரும் கூட்டம் நடத்துவதில்லை. ஒரு விதமான எதிர்ப்பு, பயமுறுத்தல் ஆரம்பித்து விட்டது. காரணம் ஏரோதின் ஆவி, பார்வோனின் ஆவியும் ஆட்சியாளர்களை பயங்கரமாக ஏவி விடுகிறது.அப் 4:28,29-ல் அப்போஸ்தலர்கள் ஜெபித்தார்கள்.
ஏரோதும், பொந்தியுபிலாத்தும் புற ஜாதிகளோடும், இஸ்ரவேல் ஜனங்களோடுங்கூட நீர் அபிஷேகம்-பண்ணின உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவுக்கு விரோதமாக மெய்யாகவே கூட்டங்கூடினார்கள். இப்பொழுதும் கர்த்தாவே, அவர்கள் பயமுறு-த்தல்களை தேவரீர் கவனித்து பாரும் என்று வேண்டிக் கொண்டார்கள். ஆம் ஏரோதின் ஆயுதமும், பார்வோனின் ஆயுதமும், சாத்தானின்



தந்திரமும் இந்தக் கடைசி நாட்களில் எல்லா இடங்களிலும் கிரியை செய்கிறது. இயேசுவை கொல்லத் தேடினவர்கள், அவருடைய பிள்ளைகளை விட்டுவிடுவார்களா?. எப்படி யோசேப்பும் மரியாளும் சில காலம் தேவ வழிநடத்துதலில், தேவ பாதுகாப்பில் இருந்தார்களோ, அதைப் போல நாமும், அனுதினமும் தேவனால் வழிநடத்தப்பட வேண்டும். தேவ சத்தத்தைக் கேட்க வேண்டும், அப்படிக் கேட்டு, அவரால் வழிநடத்தப்பட்டால் நாம் பாதுகாக்கப்படுவோம், நமக்கு விரோதமாய் உருவாக்கப்படும் ஆயுதம் வாய்க்காமலே போகும். மட்டுமல்ல நம் பிராணனை, உயிரைக் கொல்ல தேடினவன், இறந்து போவான், மரித்துப் போவான் என்று சொல்லப்பட்டுள்ளது. இயேசுவின் உயிரை வாங்கத் தேடினவன் மரித்துக் காணாமற் போனான்.

இந்த சம்பவந்தான் மோசேக்கும் சம்பவித்தது. யாத் 4:19-ல் பின்னும் கர்த்தர் மீதியானிலே மோசேயை நோக்கி நீ எகிப்துக்கு திரும்பிப் போ, உன் பிராணனை வாங்கத் தேடின மனிதர்கள் எல்லாரும் இறந்து போனார்கள் என்றார். தேவனுக்கு விரோதமாய் தலைதூக்குகிற யாரும் நிலைக்க முடியாது.

ஆண்டவராகிய தேவன் நம்மை ஒருபோதும் சாத்தானுடைய கையிலே விடுவதுமில்லை, அவனால் கொல்லப்படவோ, அழிக்கப்படவோ விடமாட்டார். மோசே தன் சங்கீதத்தில் சொல்லுகிறார். **சங் 103:4-ல் உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு உன்னை கிருபையினாலும், இரக்கங்களினாலும் முடிசூட்டுகிறார்** என்று. நம்முடைய பிராணனை, உயிரை அழிவுக்கு விலக்கி காத்துக் கொள்கிறார். சாத்தான் எவ்வளவோ கொல்லவோ, அழிக்கவோ முயற்சித்தாலும் தேவன் நம்முடைய ஜீவனை அழிவுக்கு விலக்கிக் காத்துக் கொள்வார். அதனால் தான் வேதத்தில் பல இடங்களில் நம்முடைய பிராணன், உயிர் நமக்குக் கிடைத்தக் கொள்ளைப் பொருள் என்றார்.

**எரேமியா 45:5-ல் உன் பிராணனை உனக்குக் கிடைக்கும் கொள்ளைப் பொருளாகத் தருகிறேன் என்றார்.**

என் அன்பு சகோதர, சகோதரிகளே இயேசுவின் பிறப்பில் இவ்வளவு காரியம் சாத்தானால் நடந்தது. அவை எல்லாவற்றையும் தாண்டி ஆண்டவராகிய இயேசு இந்த பூமியிலே வெளிப்பட்டு, ஜனங்களுக்கு தன் ஜீவனைக் கொடுக்க வந்தார். யோவான் 10:10-ல் இயேசு சொன்னார் நானோ, அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன் என்றார். நாம் பரிபூரணப்படவும், நம் ஆத்துமா அவருக்குள் ஜீவனைப் பெறவுமே வந்தார். இன்றைக்கு அவர் இல்லை என்றால் நமக்குள் ஜீவன் இல்லை, நம்முடைய ஆத்துமாவிற்குள் பெலனில்லை, சாத்தான் நம்மை வெறுமையிலே வைத்து குற்றுயிராக்கி விடுவான். ஆகவே நம்மை கொல்ல, அழிக்க வந்தவனை தேவன் தமது மரணத்தினாலே அழித்து, சாத்தானின் பற்களுக்கு நம்மை இரையாக கொடாமல் நம்மை அற்புதமாய் பாதுகாக்க இயேசு இந்த பூமிக்கு இறங்கி வந்தார், ஆகவே இன்றைக்கு நாம் அவருக்குள் வாழும்போது நமக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காமல் போகும்படி செய்து, நம்மை அழிக்க தேடினவனை தமது மரணத்தினால் அழித்து, நம்மை வாழ வைத்திருக்கிறார்.





# கிருபை பெற்றவளே! கர்த்தர் உன்னோடு இருக்கிறார்

சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் சகோதரிகளுக்கு கிறிஸ்து பிறப்பின் நல்வாழ்த்துக்கள்.

மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப் பட்டிருந்த போது, கன்னிகையான மரியாளிடத்தில், அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து கிருபை பெற்றவளே! வாழ்க! கர்த்தர் உன்னுடனே இருக்கிறார். ஸ்திரிகளுக்குள்ளே நீ, ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான் லூக் 1:27,28. நமது வாழ்க்கையில் பொன்னும், பொருளும் இருப்பதைக் காட்டிலும், வீடு, வாகனம் எத்தனை உடைமைகள் நமக்கு இருந்தாலும், அவைகள் எல்லாவற்றையும் விட வானத்தையும், பூமியையும் உண்டாக்கினவர் நம்மோடு இருப்பது தானே பெரிய பாக்கியம். அந்நாட்களில் எவ்வளவு பெண்கள் இருந்தார்கள் ஆனால் அவர்களில் எல்லாம் மேலாக மரியாளை கர்த்தர் தெரிந்து கொண்டார். அதே தேவன் இன்று நம்மைப் பார்த்து கிருபை பெற்ற என் மகளே! நான் உன்னுடனே இருக்கிறேன் என்கிறார் எத்தனை மகிழ்ச்சி. யோசேப்புக்கு தேவதூதன் சொப்பனத்தில் தோன்றி உன் மனைவி மரியாளை ஏற்றுக்கொள்ள பயப்படாதே! அவள் கருவுற்றிருப்பது பரிசுத்த ஆவியால் தான். அவருக்கு இயேசு என்று பெயரிடு. அவர் தம் ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார். கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவார்கள் என்று ஏசாயா சொன்னது போல இம்மானுவேல் என்றால் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம் என்று சொன்னதாக மத் 1:22-ல் வாசிக்கிறோம்

நம்மோடிருக்கத்தான் தேவாதி தேவன் மனிதனாக இந்த பூமிக்கு இறங்கி வந்தார். தனிப்பட்ட பெண்ணைப் பார்த்து கர்த்தர் உன்னுடனே இருக்கிறார் என்று சொன்னது போல நம்மையும் பார்த்து, நம்முடனே இருக்கிறேன் என்று சொல்லுகிறார். எனக்கு யார் இருக்கிறார்கள் எனக்கு ஒருவருமே இல்லை, இருந்தும் இல்லாதது போல தனியாளாய் தான் இருக்கிறேன் என்று கலங்க வேண்டாம் என் கிருபை பெற்றவளே நான் உன்னுடனே இருக்கிறேன். யார் உன்னுடனே இருந்தால் என்ன? உன்னை விட்டுப் போனால் என்ன? நான் உன்னுடனே இருக்கிறேன் என்கிறார்

## நம் முற்பிதாக்களோடு இருந்தார்

நம் முற்பிதாக்களோடு கர்த்தர் இருந்ததை அவர்கள் மாத்திரம் அறியவில்லை. ஆதி 21:22-ல் அக்காலத்தில் அபிமெலேக்கும், அவன் சேனாதிபதியாகிய பிகோலும் ஆபிரகாமை நோக்கி, நீ தேவன் உன்னுடனே இருக்கிறார் என்று சொல்லி, எங்களுக்கு எந்த தீங்கும் வஞ்சனையும் செய்யமாட்டேன் என்று ஆணையிட்டுக்கொடு என்றார்கள். ஈசாக்கு வாழ்க்கையில் ஆதி 26:28-ல் நிச்சயமாய் கர்த்தர் உம்மோடேகூட இருக்கிறார் என்று கண்டோம். ஆகையால் எங்களுக்கும் உமக்கும் ஒரு ஆணை ஏற்பாடு உண்டாக வேண்டும் என்று நாங்கள் நிர்ணயம் பண்ணினோம். நாங்கள் செய்தது போல நீரும் எங்களுக்கு எந்த தீங்கும் செய்யாதபடிக்கு உம்மோடே உடன்படிக்கை பண்ணுகிறோம் என்றார்கள்.



ஆதி 39:3-ல் கர்த்தர் (யோசேப்போடே) அவனோடே இருக்கிறார் என்றும், அவன் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறார் என்றும், அவன் எஜமான் கண்டு, யோசேப்பை தன் வீட்டுக்கு விசாரனைக்காரனுமாக்கி, தனக்கு உண்டான யாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான்.

சவுல் அசுத்த ஆவியின் அலைக்கழிப்பில் கஷ்டப்பட்ட போது இசை வாசிக்கிறவனைத் தேடி என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்றான். அப்போது சவுலின் வேலைக்காரன் ஒருவன் ஈசாயின் குமாரன் ஒருவனைக் கண்டிருக்கிறேன். அவன் பராக்கிரமசாலி, யுத்தவீரன், காரியசமர்த்தன், சவுந்தரியமுள்ளவன். கர்த்தர் அவனோடே கூட இருக்கிறார் என்றான். 1 சாமு 16:18, 1 சாமு 18:12-ல் கர்த்தர் தாவீதோடே கூட இருக்கிறார் என்றும், தன்னை விட்டு விலகிப்போனார் என்றும், சவுல் கண்டு தாவீதுக்குப் பயந்தான் என்று வாசிக்கிறோம். நியாய 6:12-ல் கர்த்தருடைய தூதனானவர் கிதியோனுக்கு தரிசனமாகி, பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார். கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? என்றும், எங்கள் பிதாக்கள் வாழ்க்கையில் நடந்த அற்புதங்கள் எங்கே? என்று, மீதியானியர் சகலத்தையும் அழித்த போது ஏங்கி கேட்ட அவனுக்கு, கிதியோனைக் கொண்டே பெரிய இரட்சிப்பை

கொடுக்க கர்த்தர் அவனோடிருந்தார். இன்றைக்கு நீங்கள் கூட கர்த்தர் எங்களோடு இருக்கிறாரா? எங்களோடு இருந்தால் இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன். எல்லாமே எதிராக நடக்கிறது என்று கல-ங்குகிறீர்களா? கிதியோன் கூட இருந்து மீதியானியர் கைக்கு தப்புவித்தவர், இரட்சிப்பை தந்தவர் நமக்கும் இரட்சிப்பைத் தருவார்.

யாக்கோபு வாழ்வில், மாமன் வீட்டில் அடிமையாய் வேலை செய்து, சம்பளத்தில் வஞ்சிக்கப்பட்ட போது இருபது வருஷங்கள் கடந்து விட்டது. இனி தொடர்ந்து அங்கு இருக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டபோது கர்த்தர் யாக்கோபை நோக்கி உன் பிதாக்களுடைய தேசத்திற்கும், உன் இனத்தாரிடத்திற்கும் நீ திரும்பிப்போ! நான் உன்னோடுகூட இருப்பேன் என்றார். தன் மனைவிகளை அழைத்துப் பேசின போது உங்கள் தகப்பனுடைய முகம் நேற்று, முந்தையநாளில் இருந்தது போல இல்லை. ஆனாலும் என் தகப்பனுடைய தேவன் என்னோடேகூட இருக்கிறார் என்று சொல்லி அங்கிருந்து புறப்பட்டு விட்டான்.

தாவீது கூட அப் 2:25-ல் தாவீது கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக நிறுத்தி நோக்கிக் கொண்டிருக்கிறேன். நான் அசைக்கப்படாதபடிக்கு, அவர் என் வலது பாரிசத்திலே இருக்கிறார். என்னை அசைக்க எத்தனை முயற்சிகள் சத்துரு செய்தாலும் அவர் என் வலது பாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை என்கிறான். சங் 56:9-ல் நான் உம்மை நோக்கிக் கூப்பிடும் நாளில் என் சத்துருக்கள் பின்னிட்டுத் திரும்புவார்கள். தேவன் என் பட்சத்தில் இருக்கிறார் என்பதை அறிவேன் என்கிறான். தாவீதோடு பட்சத்தில் இருந்த தேவன், நம்மோடும் கூட இருந்து சத்துருக்களை பின்னிட்டுத் திரும்பும்படிச் செய்வார் சங் 118:6,7 வசனத்தில் கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான்?, எனக்கு அநுகூலம் பண்ணுகிறவர்கள் நடுவில் கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார். என் சத்துருக்களின் சரிக்கட்டுதலைக் காண்பேன் என்று சங்கீதக்காரன் சொல்வதை வாசிக்கிறோம். சத்துருக்கள், எதிரிகள் கர்த்தர் அவர்களோடு இருக்கிறார் என்பதைக் கண்டார்கள், பயந்தார்கள். சத்துருக்களோடே தேவன் யுத்தம் பண்ணினதை, வழக்காடி மீட்டுக் கொண்டதை அவர்கள் கண்டார்கள்.

## கர்த்தர் நம்மைச் சுற்றிலும் இருக்கிறார்

யெகோவா ஷம்மா என்றால் நம்மை சுற்றிலும் சூழ்ந்து இருக்கிற கர்த்தர் என்று அர்த்தம். சங் 125:2-ல் பர்வதங்கள் எருசலேமைச் சுற்றிலும் இருக்குமாப்போல கர்த்தர், இது முதல் என்றென்றைக்கும் தம்முடைய ஜனத்தைச் சுற்றிலும் இருக்கிறார் என்று சங்கீதக்காரன் சொல்லுகிறார். நம்மை சுற்றிலும் இருக்கிற கர்த்தர். பாலாக் என்ற ராஜா பிலேயாம் தீர்க்கதரிசியை அழைத்து நீ எனக்காக வந்து இந்த ஜனத்தை சபிக்க வேண்டும் என்று அழைத்தான். மறைவான கண்ணிகள், மந்திர சூனியங்கள், சாபங்களை சத்துருக் கொண்டுவரப் போராடுவான். பிலேயாம் சொன்னது அவர் (கர்த்தர்) இஸ்ரவேலை ஆசீர்வதிக்கிறார். நான் அதை திருப்பக் கூடாது. அவர் யாக்கோபிலே அக்கிரமத்தை காண்கிறதும் இல்லை, இஸ்ரவேலிலே குற்றம் பார்க்கிறதும் இல்லை.



அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் அவர்களோடே இருக்கிறார். ராஜாவின் ஜெயகெம்பீரம் அவர்களுக்குள்ளே இருக்கிறது என்று எண் 23:21-ல் சொல்லுகிறான்.

ஆண்டவர், அவர் பிள்ளைகள் தப்பு செய்தால் அவர் தண்டனை தருவார். ஆனால் அவர் யாக்கோபிலே அக்கிரமத்தை பார்க்கிறதில்லை, இஸ்ரவேலிலே குற்றம் பார்க்கிறதில்லை. நம்முடைய மீறுதலுக்காக இயேசு காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களுக்காக இயேசு நொறுக்கப்பட்டார். நம்முடைய பாவங்களை அவர் பார்க்கிறதில்லை என்பதற்காக நாம் துணிந்து நடவாமல், நம்மை தாழ்த்தி அறிக்கை செய்தால் மன்னிப்பை பெற்று சந்தோஷம், சமாதானம் பெறலாம். இயேசு நம்மோடு இருப்பதால் பாவம் செய்ய நம்மை விடாமல் தடுத்து, பாதுகாத்து, அவருக்குப் பிரியமானவைகளை செய்ய உதவுகிறார். யோவான் 8:29-ல் இயேசு, என்னை அனுப்பினவர் என்னுடனே கூட இருக்கிறார். பிதாவுக்குப் பிரிமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியேயிருக்க விடவில்லை என்றார். யோவான் 16:32-ல் இதோ நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும். ஆனால் நான் தனியாய் இருப்பதில்லை, பிதா என்னுடனேகூட இருக்கிறார் என்கிறார். நம்மையும் பாவம் செய்யாமல் காத்து, இல்லாவிட்டால் தவறும் போது உணர்த்தி, நம்மை சுத்தம் செய்கிறார். இஸ்ரவேலை சுற்றி அவர் சூழ்ந்து பிலேயாம் சபிக்க அனுமதிக்காமல் பாதுகாக்கிறவராயிருக்கிறார்.

## உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்

நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்முடனே இருக்கிறார். மோசே மரித்ததும் திகைத்து நின்ற யோசுவாவைப் பார்த்து ஆண்டவர் பலங்கொண்டு திடமனதாயிரு என்று நான் உனக்கு கட்டளையிடவில்லையா? திகையாதே! கலங்காதே! நீ போகும் இடமெல்லாம் உன்தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார் யோசு 1:9-ல் வாசிக்கிறோம். யோசுவாவை பெலப்படுத்தினவர் நம்மையும் பெலப்படுத்துவார். நமக்கெதிராய் நிற்கும் பலம் பொருந்திய காரியங்கள், நம்மை மேற்கொள்ள போராடுகிற காரியங்களை நம் கூட இருந்து தகர்த்தெறிவார் **உபா 20:1-ல் நீ உன் சத்துருக்களுக்கு எதிராக யுத்தஞ்செய்யப் புறப்பட்டுப் போகையில், குதிரைகளையும், இரதங்களையும் உன்னிலும் பெரிய கூட்டமாகிய ஜனங்களையும் கண்டால், அவர்களுக்குப் பயப்படாயாக. உன்னை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்.** எவ்வளவு அருமையாய் ஆண்டவர் சொல்லியிருக்கிறார். நீ யுத்தம் செய்ய புறப்படுகையில் உன்னைக் காட்டிலும் பலவான்கள் என்றோ, பெரிய கூட்டமென்றோ குதிரை, இரதங்களைக் கண்டோ பயப்படாதே! எகிப்து தேசத்திலிருந்து ஜனங்களை நடத்தி வந்ததை நினைத்து, அவர்களை காப்பாற்றின கர்த்தர் உன்னோடே கூட இருக்கிறார் என்று நம்பு என்கிறார். எண் 14:9-ல் பயந்து நடுங்கின ஜனங்களைப் பார்த்து நீங்கள் அவர்களுக்குப் பயப்பட வேண்டியதில்லை, அவர்கள் நமக்கு இரையாவார்கள். அவர்களைக் காத்த நிழல் அவர்களை விட்டு விலகிப்போயிற்று. கர்த்தர் நம்மோடே இருக்கிறார். அவர்களுக்குப் பயப்பட வேண்டியதில்லை



என்று யோசுவாவும், காலேபும் சொன்னார்கள். **உபா 7:21-ல் அவர்களைப் பார்த்துப் பயப்பட வேண்டாம், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குள்ளே இருக்கிறார். அவர் வல்லமையும், பயங்கரமுமான தேவன்** என்று மோசே தைரியப்படுத்தினதைப் பார்க்கிறோம்
**சங் 68:16,17 இந்தப் பர்வதத்தில் வாசமாயிருக்க தேவன் விரும்பினார். ஆம் கர்த்தர் இதிலே என்றென்றைக்கும் வாசமாயிருப்பார். தேவனுடைய இரதங்கள் பதினாயிரங்களும், ஆயிரமா யிரங்களுமாயிருக்கிறது. ஆண்டவர் பரிசுத்த ஸ்தலமான சீனாயிலிருந்த வண்ணமாய் அவைகளுக்குள் இருக்கிறார்.**தமது பரிசுத்த ஸ்தலமான சீனாயிலிருந்த வண்ணமாய் நமக்குள் இருக்கிறார் என்பது எத்தனை பெரிய பாக்கியம். சீனாயின் மகிமையை மோசே மாத்திரம் பார்த்தான், ஆனால் அதே மகிமையை இயேசுவினி மித்தம், அவர் ஜனங்களுக்காக இரத்தம் சிந்தி மரித்து உயிர்த்தெழுந்ததினிமித்தம் ஆவியானவராய், சீனாயிலிருந்த வண்ணமாய் நமக்குள் இருக்கிறார்.**ஏசா 61:1-ல் கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என் மேல் இருக்கிறார், சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்.**

என்றென்றைக்கும் அவர் நமக்குத் துணையாய் இருந்து நம்மை வழிநடத்துவார். **எரே 20:11-ல் கர்த்தரோ பயங்கரமான பராக்கிரமசாலியாய் என்னோடு இருக்கிறார். ஆகையால் என்னைத் துன்பப் படுத்துகிறவர்கள் மேற்கொள்ளாமல் இடறுவார்கள்** சாலமோனின் மகன் ரெகோபெயாம் திடனற்று இருக்கையில் ராஜ்யத்தில் பாதிக்கப்பட்டான். அவன் மகன்அபியா எதிரியாகிய யெரோபெயாமை எதிர்த்தான். என் தகப்பன் திடனற்று இருக்கையில் ராஜ்யத்தை அபகரித்தாய். ஆனால் இப்போது நாங்கள் எங்கள் தேவனாகிய கர்த்தருடைய காவலைக் காக்கிறோம். 2 நாளா 13:12-ல் இதோ, தேவன் எங்கள் சேனாபதியாய் எங்களோடே கூட இருக்கிறார். எங்களோடு போராடினால் நீங்கள் ஜெயிக்க முடியாது என்று பூரிகைகளை ஊதி ஆர்ப்பரித்த போது எதிரிகள் முறிந்தோடினார்கள். அதே போல ராஜ்யத்தையும், தேவ கிருபைகளையும், ஜெப ஆவியை, மன்றாட்டின் ஆவியை, பரிசுத்தத்தை, விசுவாசத்தை, தேவ அன்பை பறிகொடுத்திருந்தாலும் அபியா ராஜா தன்னைப் பெலப்படுத்தினது போல, பெலப்படுத்திக் கொண்டு எதிராளியாகிய பிசாசை எதிர்த்து நில்லுங்கள். பயங்கரமான பராக்கிரமசாலியாய் கர்த்தர் நம்மோடு இருக்கிறார் **ஆகாய் 2:4-ல் செருபாபேலே, நீ, திடன்கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார். யோசுவா என்றும் பிரதான ஆசாரியனே நீ, திடன்கொள் தேசத்தின் எல்லா ஜனங்களே, திடன் கொள்ளுங்கள். வேலையை நடத்துங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் உங்களுடனே இருக்கிறேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.** ஆகாய் தூதனுப்பின வார்த்தையின்படி ஜனங்களை நோக்கி நான் உங்களோடே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று ஆகாய் மூலம் ஆண்டவர் பேசினார். **எரே 1:8-ல் நீ அவர்களுக்குப் பயப்பட வேண்டாம், உன்னைக் காக்கும்படிக்கு, நான் உன்னுடனே இருக்கிறேன்** என்று கர்த்தர் எரேமியாவுக்கு சொன்னார். வசனம் 19-ல் **அவர்கள் உனக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுவார்கள், ஆனாலும் உன்னை மேற்கொள்ள மாட்டார்கள். உன்னை இரட்சிக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்** என்று ஆண்டவர் எரேமியாவைத் தேற்றினார். இன்னும் **எரே 15:20-ல் உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன், அவர்கள் உனக்கு விரோதமாய் யுத்தம் பண்ணுவார்கள், ஆனாலும் உன்னை மேற்கொள்ள மாட்டார்கள். உன்னை இரட்சிப்பதற்காகவும், உன்னை தப்புவிப்பதற்காகவும் நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்** என்று வாசிக்கிறோம். அதே தேவன் நம்மை இரட்சிக்க, நம்மை தப்புவிக்க நம் கூட இருக்கிறார். அவர்களோடு இருக்கிறதைப் பார்க்கிலும், நம்மோடு இருக்கிறவர்கள் அதிகம். நம்மை காக்க நம்முடனே இருக்கிறவர் நம்மைப் பார்த்து கிருபை பெற்றவளே! நான் உன்னுடனே இருக்கிறேன் என்கிறார். என் ஆண்டவர் இயேசு நம்முடனே இருந்து நாம் கடந்து வரும் எல்லாச் சூழ்நிலையிலும் நம்மைக் காத்து நடத்துவாராக!



# நான் இருக்கிறேன் God Graces தான்

சகோதரி. பிரேமாடேவிட்

நான் இருக்கிறது தேவ கிருபையினாலே இருக்கிறேன். 1 கொரி 15:10

கிருபையும், இரக்கமும், மகாப்பெரிய அன்பும் நம் மேல் வைத்திருக்கிற நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இனிய கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்.
நல்லாயிருக்கீங்களா? நல்லாயிருக்கீங்களா என்று கேட்டவுனே, சிலர் இருக்கிறேன், ஏதோ இருக்கிறேன், உங்க புண்ணியத்தில் இருக்கிறேன் என்பீர்கள். வேறு சிலர் நான் இருக்கிறதெல்லாம் waste, எதுக்குத்தான் இருக்கிறேனோ? நான் இருந்து என்ன புண்ணியம் என்பார்கள். ஆனால் ஒரு சிலர் மட்டும்தான் நல்லா இருக்கிறேன், ஆண்டவர் கிருபையில நல்லா இருக்கிறேன், அவர் தயவில் உயர்த்தப்பட்டேன். உண்மையிலேயே அவர் கிருபை இல்லையினா எல்லாம் waste ஆயிருக்கும். கண் இமைக்கும் நேரத்தில், மருத்துவர் கைவிட்ட நேரத்தில, நெருக்கடியான அந்த சூழ்நிலையில அவர் கரம், அவர் உதவி எனக்குக் கிடைக்கலனா, நான் இப்படி இதுவரை வந்திருக்க முடியாது என்பார்கள். ஆம் நிச்சயமாக just miss அல்ல, நல்ல வேளையல்ல, தேவனின் கிருபைதான் உங்களை ஏந்தினது, தாங்கினது, வழிநடத்தினது.

இனிமேலும் ஏந்தும், தாங்கும், தப்புவிக்கும் (ஏசா 46:3,4)

என்ன? இந்த வாழ்க்கை, என்ன? இந்த உலகம் என மனசுக்குள்ளேயும் வேதனை, போராட்டம், எனக்கு வெளியிலேயும் போராட்டம். ஏன் இருக்கிறேன் என்ற

மனநிலைக்கு போய் விட்டீர்களா? இதுவரை மரணத்தினின்றும், எல்லாத் தீமையினின்றும் **அவர் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இனிமேலும் தப்புவிப்பார் என்று அவரையே நம்பியிருங்கள். (2 கொரி 1:10)** ராஜாவாயிருந்த தாவீது சொல்லுகிறார் **நான் உம்முடைய கிருபையின் மேல் நம்பிக்கையாயிருக்கிறேன். உம்முடைய இரட்சிப்பினால் என் இருதயம் களிகூரும். (சங் 13:5)** எப்பக்கமும் நெருக்கம், ஆபத்துக்கள், தீமைகள், வேதனையின் மத்தியில் தான் அவர் கிருபை, தயவு, இரக்கத்தை நம்பியிருக்கிறேன். நான் நிச்சயம் உதவி பெற்றுக் கொள்வேன். அதினால் நான் நிச்சயம் சந்தோஷமடைவேன் என்று தைரியமாக சொல்லுகிறார். நீங்களும் சொல்லுங்கள் நான் இருக்கிறது **God Grace தான்.**

## கிருபை என்றால் என்ன

**நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரப்பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. 1 யோவான் 4:10** இவர் நம்மேல் வைத்த மகாப்பெரிய அன்பு தான் கிருபை. அதை நாம் பெற்றுக் கொள்ள நமக்கு எந்த தகுதியுமே இல்லை. ஏனென்றால் ஆதாம் என்னும் மனுஷன் செய்த பாவத்தால் நாமும் பாவத்துக்குள் இருந்தோம். நம்மை அதினின்று மீட்பதற்காக, பாவத்தைப் போக்கும் பலியாக, இரத்தம் சிந்தி, தீயவனாகிய சாத்தானிடம் இருந்து நம்மை காப்பாற்று வதற்காக இயேசு மனிதனாகப் பிறந்தார். அதன்படியே அவர் நமக்காக மரித்தார், மூன்றாம் நாளிலே உயிரோடு எழும்பினார். இரட்சகராகிய தேவனிடம் மகாப்பெரிய அன்பைப் பெற்று, அவர் பிள்ளையாகும் தகுதியை நான் அடைந்தேன்.

எனக்காக இயேசு மரித்தார், எனக்காக உயிரோடு எழுந்தார் என்று நீங்கள் விசுவாசிக்கும் போதும், நம்பும் போதும் அவர் பிள்ளையாக நீங்கள் மாற முடியும். **அவர் நாமத்தின் மேல் விசுவாசம் உள்ளவர்களாய், அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் அவருடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். யோவா 1:12.** இதுவரை பாவத்துக்குள்ளும், சாத்தானுக்குள்ளும் இருந்த நீங்கள், உங்கள் மனது, உங்கள் உடல் எல்லாம் கிறிஸ்துவுக்குள் வருகிறபடியினாலே கிருபையும், சத்தியமும் நிறைந்தவராய் அவர் உங்களுக்குள்ளும் வாசம்பண்ண விரும்புகிறார். நீங்கள் அவரை அப்பா என்று அழைத்து, அவரின் பிள்ளையாய் வாழ உங்களை அழைக்கிறார். இப்பொழுதே இயேசுவே, என் உள்ளத்திற்குள் வாரும், நீர் எனக்காக மரித்து, எழுந்ததை விசுவாசிக்கிறேன், நம்புகிறேன், உம்மை என் இரட்சகராக ஏற்றுக் கொள்கிறேன். என்னை உம் பிள்ளையாக ஏற்றுக் கொள்ளும் என்று உண்மையாய் சொல்லுங்கள்.



இப்பொழுதே நீங்கள் இயேசுவின் பிள்ளை. அவரே வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர். உங்களுக்கு ஜீவனையும், சுவாசத்தையும் கொடுத்தவர். அவரே உங்களுக்கு வேண்டிய சகலத்தையும் கொடுக்கிறவர். உங்களுக்கு வேண்டிய நன்மைகளை, வேலை, உயர்வு, ஞானம், பெலன், ஏற்றதுணை....., எல்லாவற்றையும் உங்களுக்கு கொடுப்பது அதிக நிச்சயம். (மத் 7:7-11). உங்களுக்கென முன்குறித்த எதையும் அவர் நிறைவேற்ற வல்லவர். ஏனென்றால், எந்த காலம், எப்பொழுது எது நடக்கனும், செய்யனும், எப்படி நடக்கனும்னு உங்க பெற்றோர், நீங்க நினைக்கிறதை விட, அவர் ஏற்கனவே தீர்மானித்து விட்டார். நீங்கள் எங்கே குடியிருக்கனும் என்பதைக் கூட அவர் குறித்திருக்கிறாராம் (அப் 17:24-26).



எவ்வளவு அன்புள்ள தேவன். அவர் கிருபை நாம் அவர் பிள்ளையாகும் தகுதியைப் பெறும் போது கிடைக்கிறது. (2 கொரி 3:5, 1 கொரி 3:8) ஆனால் ஒரு சிலர் என் திறமை, என் படிப்பு என்று, நான் தான் என்று சொல்லுகிறார்கள். எல்லாம் அவர் கொடுத்தது, அவர் கிருபை. அவரே கிருபை, நம் குறைகளைத் திரும்பி பார்த்தால் நாம் எதையும் பெற்றுக் கொள்ள தகுதியுடையவர்கள் அல்ல, பாத்திரவான்களல்ல. எல்லாம் கர்த்தருடைய கிருபையால் பெற்றிருக்கிறபடியால் அந்த தகுதியில் நிலைத்திருக்க, தினமும் வேதத்தை வாசித்து, அவருடன் உறவாடி ஜெபித்து, அவர் வழியில் நீங்கள் நடக்கும் போது அந்த கிருபை உங்களை ஏந்தும், தாங்கும், வழிநடத்தும், ஆசீர்வதித்து உயர்த்தும் உயிர் உள்ள வரை உலகின் முடிவு வரை. எனவே தான் வேதம் சொல்லுகிறது கிறிஸ்துவுக்குள் கிருபையினாலே **நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்** அப் 17:28. **சகலமும் அவராலும், அவர் மூலமாயும், அவருக்காகவும் இருக்கிறது ரோம 11:36.** எனவே அவர் கிருபையினாலே நாம் இருக்கிறது, வாழ்கிறது மாத்திரம் அல்ல, அவருக்காகவும், அவருடைய மகிமைக்காகவும் இருக்க வேண்டும். வாழ வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். எனவே அவர் நம்மிடத்தில் மகாப்பெரிய அன்பைக் காண்பித்தபடியால் அவரில் அன்பு கூர்ந்து, அவருக்காக வாழ வேண்டும் என்று உறுதியுடன் புதிய ஆண்டிலே பிரவேசியுங்கள். கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தி மனந்திரும்பின, சவுலாயிருந்து பவுலாய் மாறின பவுல் சொல்கிறார், **பாவிகளில் பிரதான பாவியாகிய எனக்கும் தரிசனமானார்,** என்னை, தம் பிள்ளையாய் மாற்றியிருக்கிறார். அவருடைய அப்போஸ்தலன் என்று சொல்ல நான் தகுதியுடையவன் அல்ல. ஆகிலும் (நான் இருக்கிறது) தேவ கிருபையினாலே இருக்கிறேன் என்பதை உணர்ந்து, அவருடைய கிருபையை வீணடிக்காமல், அலட்சியப்படுத்தாமல் இயேசுவுக்காக வாழ்கிறேன், எனக்குள் கிருபையே, எனக்கு உதவி செய்கிறது என்கிறார். (1 கொரி 15:8-11) எனவே பவுலைப் போல கிருபையின் மேல் கிருபையைப் பெற காத்திருங்கள், காத்துக் கொள்ளுங்கள். சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே, அளவில்லாத கிருபையால் உங்களை நிரப்புவாராக!.

# எனக்கென்று ஒரு (பைபிள்) வேதாகமம் இருந்தால்...... நன்றாக இருக்குமே......

ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா?..... **Happy christmas**

ஐரோப்பா கண்டத்திலே வேல்ஸ்-ன்னு ஒரு நாட்டிலே மேரிஜோன்ஸ்-ன்னு ஒரு அக்கா. இதே டிசம்பர் மாதத்திலே பிறந்தாங்க. அவங்களுக்கு அப்பா இல்லை, அம்மா தொடர்ந்து ஆலயத்திற்கு செல்றவங்க. அதனால் மேரிஜோன்ஸ் அக்காவும், வளர்ந்தவுடன் வாரந்தவறாமல் சர்ச்சுக்கு போவாங்க. 8 வயசிலேயே அவங்க ஆண்டவரின் அன்பினால் நிரப்பப்பட்டாங்க.

அந்த நாட்களில் ஒரு வீட்டிலும் சொந்த வேதாகமம் இருந்தது இல்லை. சர்ச்சில இருந்தது, அப்புறம் 3 கிமீ தூரத்திலுள்ள ஒரு பெரிய பணக்கார வீட்டிலும் இருந்தது. வாரத்திற்கு ஒருமுறை அந்த வீட்டிற்கு சென்று வேதத்தை ஆர்வமுடன் வாசிப்பாங்க. எனக்கென்று ஒரு வேதாகமம் இருந்தால் நன்றாக இருக்குமே, அதை நான் தினமும் வாசிக்க முடியுமே என்று ஏங்கினாங்க, தன்னுடைய 10 வயதிலிருந்து 16 வயது வரை 6 வருடங்களாக சிறுக சிறுக பணம் சேமித்தாங்க. காசு கிடைச்சிட்டாலும் ஈஸியாக பைபிள் வாங்க முடியலை.

42 கிமீ தூரத்திலுள்ள ஒரு இடத்தில் ஒருவர் பைபிள் விற்பனை செய்கிறார் என்று கேள்விப்பட்டு அந்த இடத்திற்கு வெறும் காலோடே நடந்து சென்று, அங்கே எனக்கு ஒரு வேதாகமம் வேண்டும் என்று கேட்டாங்க. எல்லாம் விற்பனையாயிருச்சே என்று அங்கே சொன்ன போது அவர்கள் தேம்பி, தேம்பி அழ ஆரம்பிச்சுட்டாங்க. வேதத்தை விற்பனை செய்த தாமஸ்சார்லெஸ் என்பவர் மேரிஜோன்ஸ் அக்காவுக்கு வேதத்தின் மீதிருந்த அன்பைக் கண்டு வியந்தார். ஏற்கனவே பணம் கொடுத்த ஒருவருக்கான வேதம் என்னிடத்திலுள்ளது அதை நீ வாங்கிக் கொள் என்று சொன்னவுடன், அவங்க அடைந்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை. இப்ப எனக்கு சொந்தமான ஒரு பைபிள் கிடைச்சிருச்சு. இனிமே நானும் வேதத்தை மற்றவங்களுக்கு கற்றுக் கொடுப்பேன் என்று சந்தோஷமாய் போனாங்க.

மேரிஜோன்ஸ் அக்கா வேதத்தின் மேல் எவ்வளவு அன்பு வைத்திருந்தாங்க. உங்களுக்கே ஆச்சரியமாயிருக்குது தானே. அந்த வேதத்தை விற்பனை செய்த தாமஸ்சார்லெஸ் ஐயாவுக்கும் ரொம்ப ஆச்சரியத்தை கொடுத்தது. அதனால் அவரும் என்ன செஞ்சார் தெரியுமா? எல்லாருக்கும் வேதம் கிடைக்கனும், எல்லாரும் வாசிக்கனும் என்ற நோக்கத்தில் **Bible Society** என்ற அமைப்பை ஏற்படுத்தி, உலகத்தின் பல்வேறு மொழிகளில் வேதத்தை அச்சடித்து விற்பனை செய்தார்கள். நாம் கையில் வைத்திருக்கும் வேதமும் இப்படி வந்தது தான். 1707 ஆம் ஆண்டு 20 கோடியே 40 லட்சம் வேதாகமம் உலகம் முழுவதும் விற்பனையானது. இன்றும் விற்பனையாகிக் கொண்டேயிருக்கிறது. இன்னும் அச்சிடப்படாத மொழிகளிலும் வெளியிட முயற்சிகளை எடுத்து வருகிறார்கள்.

குட்டீஸ் நம்ம வீட்டில, கையில பைபிள் இருக்குதே எவ்வளவு பெரிய ஆசீர்வாதம். நீங்களும் கூட இனிமே புதிய ஏற்பாட்டில் ஒவ்வொரு அதிகாரமா வாசியுங்க. வார்த்தையாக இருந்த இயேசப்பா, நமக்காக மனுஷனாகி ஊழியம் செய்ததையெல்லாம் அதில் வாசிக்கலாம். அது மட்டும் இல்ல, நமக்காக அவர் தரும் ஆசீர்வாதங்களை அந்த வார்த்தைகள் மூலம் தான் பெற்றுக்கொள்ள முடியும். நீங்களும் இனி **Daily** (புது வருஷத்திலிருந்து) பைபிள் வாசிக்கப் போறீங்க தானே.

**Ok bye, God Bless You**

(ஜெபம்) அன்புள்ள இயேசப்பா, வார்த்தையாகிய உங்க மேல அன்பு வைச்சு, தினந்தோறும் வேதத்தை வாசித்து அதன்படி நடக்க உதவி செய்யுங்க. உங்க வார்த்தையின் வல்லமையினாலே என்னை ஆசீர்வதித்து நடத்துங்க. இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்.

(மனப்பாட வசனம்) கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. (மனதை, வாழ்க்கையை)கர்த்தருடைய சாட்சி (வார்த்தை) முழுமையானதும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. சங்கீதம் 19:7

இயேசு வாழ்கிறார் மீடியா துறைக்கு

# வேலைக்கு ஆட்கள் தேவை

இடம்
மதுரை
சென்னை
திண்டுக்கல்

## Available Positions :

#On Site
**MANAGER - MEDIA OPERATIONS**
Should take care of the entire media operations with vast knowledge in media and digital media with latest technology implementation. Should be Expert in Team handling and the projects.

#Hybrid
**GRAPHIC DESIGNER**
Should have vast knowedgle in Corel Draw,Adobe in design and illustrator. Should have the idea of print media and good work skill on digital platform desgin work as per the platforms

#Hybrid
**CONTENT WRITER**
Should have a biblical knoweldge to write the content both in print media as well as in the Digital Platfoms. Excellent wrtining and communicating skill needed.

## Available Positions :

#On Site
**PROGRAM PRODUCER / DIRECTOR**
Planning and creating new program as per the Inputs and need to have a vast knowledge in creating content from production to broadcasting . Knoweldge in Target Audience is a must.

#Hybrid
**VIDEO EDITOR**
Should have vast knowedgle in Premire Pro, Davinci Resolve and FCP X. With creative Edit Skill using the lastest Desinging skill as per the broadcast Standard

#On Site
**SOUND ENGINEEER**
Should have a work experience in Live sound Reinforcment and should handle the Aduio Studio in addtion the Live Broadcasting in realtime.

## Available Positions :

#Hybrid
**MOTION GRAPHICS DESIGNER**
Should have vast knowedgle in After effects, Premiere pro and photoshop with good creative skill. Using the realtime graphics and virtual studio idea will be a plus.

#On Site
**CAMERAMAN**
Should Operate the camera with lighting and audio knowledge.Ready to learn and implement the latest technology

#On Site
**PHOTOGRAPHER**
Able to handle the DSLR and to work on the lightroom. Good Knowdelge with Creative Skill. Four Wheel Driving Experi-ence Needed.

Christian Candidates Having a Zeal to Work in a Christian Organisation can APPLY

**இப்பொழுது விண்ணப்பியுங்கள்**

https://jesuslives.in/careers/
OR
Email : connect@dprince.in
OR
Whatsapp : +91 7825 04 7825
OR
Whatsapp : +91 9498 00 0449

* Any UG/PG Candidates with respective Skill
* Bsc Visual Commuication or Any Media Studies or Experience in the respective Field.
* Experienced Staffs will be given Good Remuneration.
* Food And Accomodation will be provided.
* Male & Female can Apply.
* Fresher are welcomed whereas will undergo 3 months training without stipend.

சாட்சி பகுதி

# நம்மை பெலப்படுத்தி சுகப்படுத்தும் தேவன்



### சகோதரி. மேரி - சென்னை

எனக்கு நீண்ட நாட்களாக வயிற்றுக் கோளாறு இருந்து கொண்டே இருந்தது. எவ்வளவோ மருந்து மாத்திரைகள் எடுத்தும் சரியாகவில்லை. தங்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனக்காக ஜெபிக்க கேட்டேன், நானும் பொருத்தனை பண்ணி, இயேசப்பா இந்த பிரச்சனையிலிருந்து எனக்கு சுகம் தாங்க என்று ஜெபித்தேன். தேவன் ஜெபத்தைக் கேட்டு எனக்கு பரிபூரண சுகம் தந்தார். அவருக்கே மகிமை செலுத்துகிறேன்.

### சகோதரர். கோபால் — நாக்பூர்

நான் இயேசுவை அறியாத குடும்பத்தைச் சேர்ந்தவர். தற்போது என் உறவினர் மூலமாக இயேசுகிறிஸ்துவை அறிந்து கொண்டேன். என் சரீர பெலவீனத்தின் நிமித்தம் நான் மும்பையில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டு இருக்கிறேன், ஆனால் நான் வேலை செய்வது நாக்பூரில், என் சரீர பெலவீனத்தின் நிமித்தமும், சிகிச்சை காரணமாகவும் எனக்கு பணியிடமாற்றம் கிடைக்க தங்களிடம் ஜெபிக்க கேட்டேன். தாங்களும் எனக்காக ஜெபித்தீர்கள், தேவன் அற்புதம் செய்தார். நான் சிகிச்சை எடுத்துக் கொண்டிருக்கும் மருத்துவமனை அருகிலேயே எனக்கு பணியிடமாற்றம் கிடைத்தது. தேவனுக்கு கோடான கோடி நன்றி.

### சகோதரி. ஜெயந்தி - நீலகிரி

எனது கணவர் கடந்த செப்டம்பர் மாதம் திடீர் என்று மாரடைப்பு காரணமாக இறந்தார். மிகுந்த மன வேதனையில் இருந்தேன், மற்ற மனிதர்களாலும் மிகவும் கஷ்டப்பட்டேன். அவர்களும் எனக்கு நிறைய பிரச்சனைகளைக் கொடுத்த நிலையில் நான் தினமும் காலையில் 5 மணிக்கு யூடியூப்பில் ஒளிபரப்பாகும் இயேசுவை தினம் பார்ப்போம் நிகழ்ச்சியைப் பார்ப்பேன், அதில் தினமும் நீங்கள் பாடும் பாடல்கள், ஜெபம், கொடுக்கும் தேவ வார்த்தைகள் மூலம் தேவன் என்னைத் தேற்றினார். எனக்காகவே பேசுவது போல இருக்கும். தற்போது நான் கர்த்தருக்குள் பெலப்படவும், அவரையே சார்ந்து ஜீவிக்கவும் தங்களுடைய நிகழ்ச்சி மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கிறது. இந்த நிகழ்ச்சி மூலம் என்னை உயிர்ப்பித்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.



# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார்(1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | | | |
|---|---|---|---|
| A/C NAME | JESUS LIVES TRUST | A/C NAME | L.VINCENT RAJ |
| BRANCH | KOCHADAI MADURAI | BRANCH | MADURAI |
| BANK NAME | UNION BANK OF INDIA | BANK NAME | AXIS BANK |
| A/C.NO | 493902010001022 | A/C.NO | 109010100247030 |
| IFSC CODE | UBIN0549398 | IFSC CODE | UTIB0001765 |

## 2) இணையதளம்(WEBSITE)

WWW.JESUSLIVES.IN

ஸ்கேன் செய்யுங்கள்

## 3) காசோலை(CHEQUE)

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

## 4) GOOGLE PAY : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

## 5) மணியார்டர்(E.M.O) :

இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர்,
ஏ - காலனி பரவை ,மதுரை - 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

# நடப்பு செய்திகள்

# தமிழக மலை கிராமங்களில் கொடிய தலசீமியா நோய்

தலசீமியா என்பது ஒருவகை சிவப்பணுக்கள் குறைபாடாகும். அதாவது மனிதர்களில் அரிதாக சிலருக்கு அவர்களின் உடலில் ரத்தப்புரதம் (ஹீமோகுளோபின்) தேவையான அளவைவிடக் குறைவாக இருக்கும். இதற்குக் காரணம் சிவப்பணுக்கள் விரைவாகச் சிதைந்து போவதே. இந்நிகழ்வு சிவப்பணு சிதைதல் (hemolysis) எனப்படுகிறது. பெரும் தலசீமியா கொண்டவர்களுக்குக் கடுமையான ரத்த சோகை இருக்கும். இதனால் இதற்கு மருத்துவம் அளிக்கத் தொடர்ந்து ரத்தம் செலுத்த வேண்டும். தலசீமியா நோயால் தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, சேலம் மாவட்டங்களில் உள்ள மலை கிராமங்களில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அரசு தருமபுரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த ஹீமோபிலியா மற்றும் ஹீமோகுளோபினோபதி மையத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஒரு சில நோய்கள் அதன் அறிகுறியை உணர்த்துவதோடு, தாக்கத்தை உடனடியாக வெளிப்படுத்தும். ஆனால், ஒரு சில நோய்கள் மற்றும் குறைபாடுகள் இருப்பதே தெரியாது. சில ஆண்டுகளுக்கு முன்பு வரை சக்கரை நோய் புற்றுநோய் என்பதெல்லாம் மிகவும் அரிதான நோயாக இருந்தது. அதேபோல 10 ஆண்டுகளுக்கு முன்பு வரை தைராய்டு குறைபாடும் PCOS, உள்ளிட்ட குறைபாடுகளும் என்னவென்றே தெரியாமல் இருந்தது. அதேபோல மரபணு சார்ந்த பலவித நோய்கள் சமீபகாலமாக அதிகரித்துள்ளன. சில நோய்கள் தீவிரமான தன்மையைக் கொண்டுள்ளன. அவற்றில் ஒன்றுதான் தலசீமியா என்று கூறப்படும் ரத்த சம்பந்தப்பட்ட நோயாகும். இது ஒரு மரபணு கோளாறு மற்றும் பரம்பரையாக பாதிப்பு ஏற்படுத்தும் நோயாகும்.

**சிக்கல் செல் என்னும் ரத்த சோகை நோய்**

சிக்கல் செல் ரத்த சோகை நோய் உள்ளவர்களுக்கு ரத்தத்தில் உள்ள சிவப்பணுக்கள் அரிவாள் போன்று மாறி சிறிய ரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படுத்தும். இதனால் உடலில் உள்ள அனைத்து உறுப்புகளிலும் ரத்த ஓட்டம் குறைந்து சிசுக்களுக்கான பிராண வாயுவின் அளவு குறையும். அதனால் அவர்களுக்குத் தீவிரமான உடல் வலி, உறுப்புகளில் பாதிப்பு, பக்கவாதம் மற்றும் எளிதாக நோய்த்தொற்று ஏற்படும்.

**தலசீமியா என்னும் மேஜர் நோய்**

தலசீமியா மேஜர் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் அதிதீவிர ரத்த சோகை நோயால் பாதிக்கப்படுவதால் உயிர் வாழ மாதந்தோறும் ரத்தம் ஏற்ற வேண்டும். அவ்வப்போது ரத்தம் ஏற்றுவதால் உடலில் இரும்புச் சத்து அதிகரிக்கிறது. இதனால் இதயம், கல்லீரல் மற்றும் நாளமில்லாச் சுரப்புகளில்
இரும்புச்சத்து அதிகரிப்பதால் பல பின்விளைவுகள் ஏற்படும். அதனால் இந்த நோயாளிகளுக்கு இரும்பு சத்தைக் குறைக்கும் மருந்துகள் தினந்தோறும் கொடுப்பது அவசியம். ஹெமடோஃபாய்டிக் ஸ்டெம் செல் மாற்று சிகிச்சை (எலும்பு மச்சை மாற்று சிகிச்சை) செய்வதன் மூலம் தலசீமியா நோயை முற்றிலும் குணப்படுத்தலாம். ஆனால் அதற்கு எச்.எல்.ஏ (HLA) பொருத்தம் உள்ள ஒருவர்தான் எலும்பு மஜ்ஜை தானம் செய்ய முடியும்.

செம்பட்டியில்

புத்தாண்டு வாக்குத்தத்த

# ஆசீர்வாதக் கூட்டம் 2024





ஜனவரி **01**

மதியம் 3 மணி
முதல் மாலை 5 வரை

இடம்
வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெப மையம்
செம்பட்டி, திண்டுக்கல்.

"என் பிள்ளைகள் ஒலிவமர கன்றுகள்"

# "என் பிள்ளைகள்" ஆசீர்வாத ஜெப திட்டம்



- உங்கள் பிள்ளைகளின் ஆசீர்வாதத்திற்காக, தேவ பாதுகாப்பிற்காக, படிப்பிற்காக, சுகத்திற்காக அனுதின பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்
- உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை குறித்த கலக்கம் மற்றும் பயம் நீங்க.
- அவர்களை குறித்த தேவ திட்டம் நிறைவேற.
- வயது வரம்பு 24 வரை

இத்திட்டத்தில் இணைந்திட அழையுங்கள்
94428 00449, 94428 00447
WHATSAPP மூலம் இணைய 94980 00449

இன்றே இணைந்திடுங்கள்.
உங்கள் பிள்ளைகளின் விண்ணப்பங்களுக்காக
அனுதினமும் பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.

LIVE
நேரலை ஜெபம்

# கர்த்தாவே என்னை கைதூக்கிவிடும்



**Evg.KalaVincentraj** **Evg.L.Vincentraj**

**திங்கள் முதல் வெள்ளி வரை**
**இரவு 09:00 - 09:45 வரை**

நமது இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
அனைத்து சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளத்திலும் ஒளிபரப்பாகிறது